


22.02.2025

தலைப்பு செய்திகள்

- நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் திகழ்கிறது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
- புதிய தேசிய கல்விக்கொள்கை நம்நாட்டை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.
- தரமான கல்வி வழக்குவதில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- நாமக்கல் கே.புதுப்பாளையத்தில் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.
- புனே ஓப்பன் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதியாட்டத்தில் ஜீவன் நெடுஞ்செழியன், விஜய்சுந்தர் இணை - ஆஸ்திரேலிய இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங் சௌஹான்

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், உயிர்நாடியாகவும், விவசாயம் திகழ்கிறது என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 3 நாள் வேளாண் அறிவியல் கண்காட்சியை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை விவசாயிகள் மற்றும் வேளாண்மை துணையின்றி எட்டமுடியாது என்று குறிப்பிட்டார்.

2047-ம் ஆண்டில் நம் தேசம் வளர்ச்சியடைந்த நாடாக மேம்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

இக்கண்காட்சியில், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் நவீன தொழில்நுட்பங்களின் செய்முறை விளக்கங்கள், நவீன கண்காட்சி, கருத்தரங்கு, வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைகள் உள்ளிட்டவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

தர்மேந்திர பிரதான்

புதிய தேசிய கல்விக்கொள்கை நம்நாட்டை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

டெல்லி பல்கலைக்கழகத்தின் 101-வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றியஅவர், தேசிய கல்விக்கொள்கை 2020-ஐ நாடுமுழுவதும் செயல்படுத்துவதன் மூலமே, 2047-ம் ஆண்டு நம்நாடு வளர்ச்சியடைந்த தேசமாக உருவாகும் என்று குறிப்பிட்டார்.

மக்கள் தொகையில் 60 சதவிகிதம் பங்களிப்பு வழங்கும் இளையோர் பிரதமரின் வளர்ச்சியடைந்த பாரத இலக்கை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமரின் கிசான் சம்மான், வேளாண் நிதியுதவி திட்டத்தின் 19-வது தவணை தொகையை பிரதமர் திரு.நரேந்திரமோடி பீஹார் மாநிலம் பகல்பூரிலிருந்து விவசாயிகளின் வங்கி கணக்குகளில் நாளைமறுநாள் விடுவிக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் 22 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை, நாடுமுழுவதிலுமுள்ள 9 கோடியே 8 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்துகிறார்.

இந்த திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் 3 தவணைகளாக தலா 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி செலுத்தப்படுவதன் தொடர்ச்சியாக பிரதமர் இந்நிதியை விடுவிக்கிறார்.

வேளாண் நிதியுதவி திட்டத்தில் இதுவரை 3 லட்சத்து 46 ஆயிரம் கோடி ரூபாய், விவசாயிகளின் வங்கி கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

மொரீஷியஸ் நாட்டின் 57-வது தேசிய தின கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக பிரதமர் கலந்துகொள்வதாக அந்நாட்டு பிரதமர் திரு. நவீன்ராம் கூலம் அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

இதனிடையே பிரதமர் அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 119-வது முறையாக நாளைகாலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, Airnews இணையதளம், Newsonair செயலியில் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும்.

தொடர்ந்து காலை 11.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இதன் மொழியாக்கம் இடம்பெறும்.

❖❖❖❖❖❖❖

கூட்டு ராணுவப்பயிற்சி

இந்திய - ஜப்பான் கூட்டு ராணுவப்பயிற்சி Dharma Guardian ஜப்பானின் கிழக்கு ஃபியூஜி பயிற்சி பகுதியில் நாளைமறுநாள் தொடங்குகிறது.

அடுத்தமாதம் 9-ம் தேதிவரை நடைபெறும் இப்பயிற்சியில் மெட்ராஸ் படைப்பிரிவை சேர்ந்த ராணுவப் படையினர் உட்பட 120 பேர் இதில் கலந்து கொள்கின்றனர்.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், போர்த்திறன்களை செம்மைப் படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் இப்பயிற்சியில் மேற்கொள்ளப்படும்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தரமான கல்வி வழக்குவதில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் திருப்பெயர் ஊராட்சியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 177 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு பள்ளி கட்டிடங்களை திறந்துவைத்து பேசியஅவர், கல்வித் துறையில் உலக அளவிலான சாதனைகளை தமிழகம் நிகழ்த்தி வருவதாக குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக செயலி மற்றும் விழா மலரையும் முதலமைச்சர் வெளியிட்டார்

❖❖❖❖❖❖❖

எல்.முருகன்

நாமக்கல் மாவட்டம் கே. புதுப்பாளையம் பகுதியில் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சமுதாயகூடமும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியும் அமைக்கப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ள அமைச்சர், கே. புதுப்பாளையம் பகுதி பொதுமக்களிடம் கலந்துரையாடுகையில் இதனைத் தெரிவித்தார்.

இப்பணிகளை விரைந்து மேற்கொள்ள துறை அலுவலர்களை அமைச்சர் அறிவுறுத்தினார்.

முன்னதாக இன்றுகாலை திருச்சி விமான நிலையம் வந்த அமைச்சர், நாமக்கல்லுக்கு சாலைமார்க்கமாக புறப்பட்டு சென்றார்.

❖❖❖❖❖❖❖

கீதாஜீவன்

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு பல்வேறு பராமரிப்புகள்

மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்

தூத்துக்குடி எட்டயபுரத்தில் இன்று நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 200 கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கிய அமைச்சர், மகளிர் பேறுகாலத்தில் ஊட்டச்சத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

மருத்துவ பணியாளர்

தமிழ்நாட்டில் மருத்துவ பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் உள்ளிட்ட மருத்துவ காலி பணியிடங்களுக்கான கலந்தாய்வு சென்னை சுகாதாரம், குடும்பநலத்துறை நலவாழ்வு பயிற்சி யைமத்தில் இன்று தொடங்கியது.

3 நாட்கள் இக்கலந்தாய்வு நடைபெறுகிறது

❖❖❖❖❖❖❖

வலி மாத்திரைகள்

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரை பகுதியில் படகுமூலம் இலங்கைக்கு கடத்தவிருந்த 75 லட்ச ரூபாய் மதிப்பிலான வலி நிவாரண மாத்திரைகளை Q- பிரிவு காவல்துறையினர் பறிமுதல் செய்ததோடு 2 பேரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கப்பல் வாய்ஸ்

நாகை இலங்கை காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை இன்றுமுதல் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நீலகிரி வாய்ஸ்

நீலகிரி மாவட்டத்தில் விளையும் மலைப்பூண்டிற்கு கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

சதுரகிரி வாய்ஸ்

விருதுநகர் மாவட்டம் சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கம் திருக்கோவிலுக்கு பக்தர்கள் செல்ல 4 நாட்களுக்கு வனத்துறையினர் அனுமதி வழங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் நெகிழி கழிவு சேகரிப்பு முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

பெரம்பலூர் விதை பரிசோதனை நிலையத்தில் நடப்பு நிதியாண்டில் இதுவரை 2 ஆயிரத்து 431 விதை மாதிரிகள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வேளாண் அலுவலர்கள் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

புனே ஓப்பன் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் இறுதியாட்டத்தில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், விஜய்சுந்தர் இணை - ஆஸ்திரேலிய இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

மகளிர் பிரீமியர்

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் இன்று டெல்லி கேப்பிட்டல்ஸ் - யூ.பி.வாரியர்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

ஐ.சி.சி.

ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் குரூப்-பி பிரிவில் லாகூரில் இன்று இங்கிலாந்து ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இந்தியா தனது 2-வது ஆட்டத்தில் துபாயில் நாளை பாகிஸ்தானுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖